முருகப்பெருமான் துணை

**மகான் ஜனந்தனர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.11.2022**, வியாழக்கிழமை

1. அறமாக வாழும் வள்ளலே
   அண்ணலே உன் பெருமை கூறி
   வரமென அனுகூல ஆசிதனை
   வழங்குவேன் சுபகிருது தேள் திங்கள்
2. திங்களிலே அட்டமதிகதி குருவாரம்
   **(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 08 ம் நாள் 24.11.2022, வியாழக்கிழமை)**
   தேசிகனுக்கு ஜனந்தனர் யானும்
   இங்கனமே உலகநலமுற உரைப்பேன்
   இனிதே அரங்கன் தேடுகின்ற
3. தேடுகின்ற ஞானவான்கள் படை
   தேசமெல்லாம் நிரம்ப இருக்க
   நாடிவந்த கலியுக மக்கள் தானும்
   ஞானியே அரங்கா என நம்பிவர
4. வருகவே ஞானமும் தெளிவும்
   வரமாக மக்களிடை கிட்டி
   தருமம் வளர்க்கும் பக்குவமும்
   தரணி காக்கும் ஆற்றலும் கூடி
5. கூடியே சன்மார்க்க வழியே
   குருவரங்கன் மெய்ஞான வழியாக
   நாடியே உலகமெங்கிலும் மாற்றம்
   ஞானயுக மாற்றமாகக் கண்டு
6. கண்டுமே ஞானவான்கள் தலைமை
   கலியினில் கண்டு இனிதே
   தொண்டும் தூய்மையும் தயவும்
   தேசிகன் காக்கும் சக்திமிக்க
7. சக்திமிக்க மக்களாய் உலகோர்
   சரணாகதி வேலவன் வழி மிகுந்து
   பக்தியுடன் சித்தியும் கூடிய நல்
   பாடிடுவேன் ஞானிகளாக தேற்றமடைவர்
8. தேற்றம் தரும் கலியின் அவதார
   தேசிகனே உயர்ந்த ஞானி
   மாற்றம் சடுதி நடந்திடவும்
   மரணம் வென்று நிலைதன்மை தன்னையே
9. தன்னையே இலகுவாய் அடைந்து
   தவதரும பலத்தின் வடிவாக
   அண்ணலாக ஆறுமுகப் பெருமானாக
   அகிலத்தில் மக்கள் தானும் மாறி

10. மாறியே ஞான பூமியாக மாற்றம்
மண்ணுலகம் அரங்கனால் காணும்
ஆறுமுகன் தலைமையை ஏற்ற
ஆளுமைகள் ஆகவே உலகம்

11. உலகம் எங்கிலும் ஞான ஆட்சி
உண்மைபட சடுதி அமைந்து
வேலவன் வழிகாட்டல் கூடிட
வினை இல்லா நல்லுலகமாகும்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–